எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. நாம் உதவி செய்கிறோம். உதவி செய்த பணம் வீணாகாமல், பணத்தைத் திருப்பிக் கட்டினால் போதும் என்பதுதான் நம் எண்ணம்.

மணப்பாறையில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்

* 40 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தனி தாலுகாவாக மாற்றப்பட்ட பிறகு அங்கு தனியாக சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்று துவங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மணப்பாறையிலுள்ள மக்கள் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் திருச்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் நெடுந்தூரம் செல்வதால் பல நாட்களை வீணாக்க வேண்டியிருக்கிறது. இதை நம்முடைய அரசாங்கம் பரிசீலனை செய்து மணப்பாறையில் இனிமேலாவது கோர்ட்டுகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மணப்பாறையிலிருந்து திருச்சிக்கு 22 மைல்கள் தான். ஏராளமான பஸ்கள் ஓடுகின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அரியலூரில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நிறுவுவதற்கும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோர்ட்டுகள் நிறுவும்பொழுது எந்த அடிப்படையிலே உரிமை வழங்கப்படுகிறது ? தாலுகாவிற்கு ஒன்று என்ற அடிப்படையிலா ? மக்கள் தொகை அடிப்படையிலா ? தேவையின் அடிப்படையிலா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு வட்டாரத் தலைநகரிலே இது போன்ற நீதிமன்றம் இருக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. ஆனால், நீதிமன்றம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னாலே உயர்நீதி மன்றம் கலந்தாலோசிக்கப்படுகிறது. அவர்கள் அந்த ஊரிலே நீதிமன்றம் ஏற்படுத்தினால் போதிய வழக்குகள் இருக்கும், நாம் செலவழிக்கக்கூடிய தொகைக்குப் பயன் கிடைக்கும் என்று முடிவு கூறினால் அது பரிசீலிக்கப்படும்.

1969 பிப்ரவரி 24]

திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, மதுரையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கோர்ட்டு கட்டிடங்கள் வேலை எப்பொழுது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஜூன் மாதம் நீதிமன்றங்களைத் திறக்கும்பொழுது அதை முடித்துத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் மாடிக் கட்டிடங்கள் இன்னும் முடிவடையாமல் இருப்பதால் சில மாதங்கள் அதிகம் பிடிக்கும் என்று நம்புகிறேன்.

Establishment of Sugar Mills

* 41 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether three more sugar mills are to be started in Tamil Nadu this year (1968);

(*b*) if so, whereat and on what basis (either under public or co-operative sector, or private sector); and

(*c*) the quantum of Central assistance for these mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இல்லை.

THIRU K. VINAYAKAM: A press communique has been issued by the Ministry under reference that three more sugar mills will be established in Tamil Nadu. If so, is what the Minister says correct or is the press communique correct?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டும் சரி, நம்முடைய கனம் அங்கத்தினரவர்கள் கேள்வி கேட்டிருப்பது 1968-ம் ஆண்டிற்குத்தான். ஆகவே, இல்லையென்று சொன்னேன். நமது அரசைப் பொறுத்த அளவிற்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவு முறையிலே அமைப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி கேட்டிருக்கிறது.

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படித் துவக்க இருக்கிற மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் 2 ஆரம்பிக்கப் போவதாக கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த இரண்டையும் எந்த எந்த இடத்தில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அனுமதி கிடைத்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: மதுரையில் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் ஓடுவதாகக் கூறப்படுகிறது.